# அக்டோபர்– 01 – பொதுக்கால 26ம் ஞாயிறு

“எவர் தந்தையின் விருப்பப்படி செயல்பட்டவர்?”
(மத் 21:31)

## முதல் வாசகம் : ஏசேக்கியல் 18 : 25 – 28

ஆயினும், ”தலைவரின் வழி செம்மையானதாக இல்லை” என்று நீங்கள் சொல்கிறீர்கள். இஸ்ரயேல் வீட்டாரே! கேளுங்கள். என் வழியா நேர்மையற்றது? உங்கள் வழிகளன்றோ நேர்மையற்றவை!. நேரியவர் தம் நேரிய நடத்தையினின்று விலகி, தவறிழைத்தால், அவர்கள் தாம் இழைத்த தவற்றின் பொருட்டுச் சாவர்.பொல்லார் தாம செய்த பொல்லாப்பினின்று விலகி, நீதியையும் நேர்மையையும் கடைப்பிடித்தால், தம் உயிரை அவர்கள் காத்துக் கொள்வர். அவர்கள் உண்மையைக் கண்டுணர்ந்து, தாம் செய்த குற்றங்கள் அனைத்தினின்றும் விலகி விட்டால், அவர்கள் வாழ்வது உறுதி அவர்கள் சாகமாட்டார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம் இரக்கத்தையும் பேரன்பையும் நினைத்தருளும்

## இரண்டாம் வாசகம் : பிலிப்பியர் 2 : 1 – 11

சகோதர சகோதரிகளே! கிறிஸ்துவிடமிருந்து நீங்கள் ஊக்கம் பெற்றுள்ளீர்களா? அன்பினால் ஆறுதலும், தூய ஆவியினால் தோழமையும் பரிவுள்ளமும் இரக்கமும் கொண்டுள்ளீர்களா? அப்படியானால் நீங்கள் ஒரே எண்ணமும் ஒரே அன்பும் ஒரே உள்ளமும் கொண்டவராய்த் திகழ்ந்து, ஒரு மனத்தவராயிருந்து என் மகிழ்ச்சியை நிறைவாக்குங்கள்.கட்சிமனப்பான்மைக்கும் வீண் பெருமைக்கும் இடம் தர வேண்டாம். மனத் தாழ்மையோடு மற்றவர்களை உங்களிலும் உயர்ந்தவராகக் கருதுங்கள்.நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல, பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறை கொள்ள வேண்டும்.கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்!கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை.ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி,சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார்.எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர். தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக ”இயேசு கிறிஸ்து ஆண்டவர்” என எல்லா நாவுமே அறிக்கையிடும்.

## நற்செய்தி : மத்தேயு 21 : 28 - 32

அக்காலத்தில் இயேசு கூறியதாவது : ”இந்த நிகழ்ச்சியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ஒரு மனிதருக்கு இரு புதல்வர்கள் இருந்தார்கள். அவர் மூத்தவரிடம் போய், ”மகனே, நீ இன்று திராட்சைத் தோட்டத்திற்குச் சென்று வேலை செய்” என்றார். அவர் மறுமொழியாக, ”நான் போக விரும்பவில்லை” என்றார். ஆனால் பிறகு தம் எண்ணத்தை மாற்றிக்கொண்டு போய் வேலை செய்தார். அவர் அடுத்த மகனிடமும் போய் அப்படியே சொன்னார். அவர் மறுமொழியாக, ”நான் போகிறேன் ஐயா!” என்றார் ஆனால் போகவில்லை. இவ்விருவருள் எவர் தந்தையின் விருப்பப்படி செயல்பட்டவர்?” என்று கேட்டார். அவர்கள் ”மூத்தவரே” என்று விடையளித்தனர். இயேசு அவர்களிடம், ”வரிதண்டுவோரும் விலைமகளிரும் உங்களுக்கு முன்பாகவே இறயைாட்சிக்கு உட்படுவர் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். ஏனெனில் யோவான் நீதிநெறியைக் காட்ட உங்களிடம் வந்தார். நீங்களோ அவரை நம்பவில்லை. மாறாக வரி தண்டு வோரும் விலைமகளிரும் அவரை நம்பினர். அவர்களைப் பார்த்த பின்பும் நீங்கள் உங்கள் எண்ணத்தை மாற்றிக்கொள்ளவுமில்லை அவரை நம்பவுமில்லை” என்றார்.

**தியானம்:** தந்தையின் விருப்பத்தையும், அவரின் சித்தத்தையும் நிறைவேற்றவே இறைமகன் மனிதனானார். அதுவே எமது கடமையுமாகும். ஆனால் நாம் அவ்வாறு நடந்து கொள்கின்றோமா? என்று சித்திக்க இன்றைய வாசகங்கள் எமக்கு அழைப்பு விடுக்கின்றன. கிறிஸ்த்தவர்கள் மட்டும் தான் விண்ணரசை அடையமுடியும் என்ற தப்பான அபிப்பிராயத்திற்கு யேசு நற்செய்தி வழியாக முற்றுப்புள்ளி வைக்கிறார். எமது பார்வையில் நீதிமானாக தெரிபவர் இறைவனின் பார்வையில் பாவியாகவும், பாவிகள் என்று கணிக்கப் படுவோர் நீதிமானாகவும் தெரிவதை நாம் பார்க்கிறோம். இறை அரசிற்காக அன்று மட்டும் அல்ல இன்றும் பலர் இரத்தம் சிந்துகிறார்கள். இன்று பல முஸ்லிம் நாடுகளில் கிறிஸ்த்தவர்கள் கொல்லப்படுகிறார்கள், கொடுமைப் படுத்தப் படுகிறார்கள், தனிமைப்படுத்தப் படுகிறார்கள். யேசு அன்று கல்வாரியில் எமக்காக இரத்தம் சிந்தினார். இன்று தமது விசுவாச வாழ்வைக் காக்க பலர் இரத்தம் சிந்துகிறார்கள். இங்கே மொண்றியலில் உள்ள புனித சூசையப்பர் தேவாலயத்தில் கூடும் பக்தர்களில் கிறிஸ்த்தவர்களை விட பிற சமயத்தவரே அதிகம், குறிப்பாக முஸ்லிம் மக்களைகூட நாம் காணலாம். இது எதனைக் காட்டுகிறது. சுற்றுலாத்தலம் என்பதனைவிட, தமது தேவைகள் நிறைவேற, நோய்கள் நீங்க என்று பல்வேறு தேவைகளினால் வருந்துவோருக்கு இந்த இடம் ஒரு ஆறுதல் தருகின்ற இடமாக இருக்கிறது. எனேவே கிறிஸ்த்தவம் இனம், மொழி, மதம், நாடு எல்லாவற்றையும் தாண்டிய ஒன்றே! தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றி அவருடன் இணைந்து வாழ்வதையே யேசு நம்மிடம் எதிர் பார்க்கிறார். அதனை செய்பவர்கள் எல்லோரும் விண்ணரசிற்கு உரியவர்களே!